பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 01 2025 Friday 7 15 Pm

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தில்லியில், ஆளும் ஆம் ஆத்மி அரசு, பள்ளிக் கல்வித்துறை மேம்பாட்டில் அக்கறை செலுத்தவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறை கூறியுள்ளார்.
- விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகள், பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ஈடு செய்யப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.
- வைப்பு நிதி ஓய்வூதிய நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை மறைக்கும் முயற்சியிலேயே திமுக அரசு ஈடுபட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.
- விஜய் அஸாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தமிழகம் 10 விக்கெட் வித்தியாசத்தில் மிஸோரமை வென்றது..

>>>>><<<<

தில்லியில், கடந்த பத்தாண்டுகளாக ஆட்சி செய்யும் ஆம் ஆத்மி அரசு, பள்ளிக் கல்வித்துறை மேம்பாட்டில் அக்கறை செலுத்தவில்லை என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறை கூறியுள்ளார்.

தில்லியில் சுமார் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் பேசினார்.

திரு. அரவிந்த் கெஜ்ரிவால் முதலமைச்சராக இருந்த போது, தமது இல்லத்தை சொகுசு பங்களாவைப் போல் மாற்றிவிட்டு, தற்போது ஏழைகளுக்கான குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளிப்பேன் என்று பேசுவது நகைப்புக்குரியது என்று பிரதமர் கூறினார்.

தில்லியில் உள்ள குடிசைப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதிகள் செய்யப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை தில்லி அரசு செயல்படுத்தாததால், மக்கள் தரமான சிகிச்சை கிடைக்காமல் அவதிப்படுவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

>>>>><<<<

ஆன்மிக பூமியான இந்தியாவில் வேதங்கள் மற்றும் சனாதனத்திற்கு எதிரான கருத்துக்களை கூறுவது நாட்டின் அறிவுசார் பாரம்பரியம் சரியாக புரிந்துகொள்ளப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில், 27வது சர்வதேச வேதாந்த மாநாட்டை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாட்டின் பண்டைய கால ஞான உபதேசமான வேதாந்த தத்துவம், உலகெங்கிலும் உள்ள சீடர்களால் பின்பற்றப்படுவதாக அவர் கூறினார்.

இது, சாதாரண தத்துவம் என்ற நிலைக்கு அப்பாற்பட்டு, மனித உணர்வுக்கான வழிமுறையாக உள்ளது என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

>>>>><<<<

மாலத்தீவுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை ஏற்றுமதி செய்ய இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்று  வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தம்மை சந்தித்த மாலத்தீவு வெளியுறவு அமைச்சர் திரு. Abdullah Khaleel உடன், குழுக்கள் அளவிலான பேச்சுவார்த்தை நடத்திய அவர், அண்டை நாட்டிற்கு முதலிடம் என்ற அடிப்படையில் மாலத்தீவுக்கு இந்தியா உதவிகளை வழங்கும் என்று கூறினார்.

நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்திற்கு உள்ளூர் கரன்ஸியை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம், பல்வேறு துறைகளிலும் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை அதிகரித்துள்ளதாகவும் திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

>>>>><<<<

பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே சீனா புதிய அணை கட்டும்  விவகாரத்தில் இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று மத்திய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்திர் ஜெய்ஸ்வால், சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத் பகுதியில் மேற்கொள்ளப்படும் நீர் மின் திட்டத்தால், பிரம்மபுத்திரா ஆற்றின் கீழ்ப்பாசன பகுதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு சீனாவிடம் வலியுறுத்தியிருப்பதாக கூறினார்.

இதுதொடர்பாக, நிபுணர்கள் அளவிலும், தூதரக அளவிலும் தொடர்ந்து பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் திரு. ரன்திர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>><<<<

பயிர்கள் பாதிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பு, பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் மூலம் ஈடு செய்யப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

நாசிக்-கில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகள் செயற்கைக்கோள் மூலம் ஆய்வு செய்யப்படுவதாக தெரிவித்தார்.

வெங்காயம் உள்ளிட்ட விளைபொருட்களின் சந்தை விலை அதிகரிக்கும் போது, அதன் பலன் விவசாயிகளை சென்றடைவதில்லை என்று குறிப்பிட்ட அவர், இடைத்தரகர்களால் ஏற்படும் பிரச்சினைக்கு தீர்வு காண,  புதிய கொள்முதல் முறை செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்.

விவசாயம், இந்திய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்வதால், விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு மத்திய அரசு முன்னுரிமை அடிப்படையில் தீர்வு காண்பதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<

தொழிலாளர் வைப்பு நிதி சந்தாதாரர்களுக்கான ஓய்வூதிய நடைமுறை எளிதாக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சமூகவலைதள பக்கத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், வைப்புநிதி அமைப்பின் ஒருங்கிணைந்த ஓய்வூதிய பணப் பட்டுவாடா முறை தற்போது நாடுமுழுவதும் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, வைப்பு நிதி சந்தாதாரர்கள் நேரடி ஆய்வுக்கு வருவது தவிர்க்கப்பட்டிருப்பதுடன், ஓய்வூதியத்தை எந்த வங்கியிலும் பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் 68 லட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு புதிய நடைமுறை மூலம், சுமார் ஆயிரத்து 570 கோடி ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது என்றும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை மறைக்கும் முயற்சியிலேயே திமுக அரசு ஈடுபட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த வழக்கில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்யக் கோரி மதுரையில் பேரணி நடத்த முயன்ற பிஜேபி மகளிர் அணியினரை காவல்துறை தடுத்து நிறுத்தி, கைது செய்ததற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக போராட்டங்களை காவல்துறை மூலம் ஒடுக்கிவிட முடியாது என்றும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

உத்தரபிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் நடைபெறவுள்ள மகா கும்பமேளாவின் போது, வானிலை பற்றிய விவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள சிறப்பு வலைதளப் பக்கம் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

இந்த வலைதளப் பக்கத்தை இன்று தொடங்கி வைத்த லக்னோ வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. Manish Ranalkar, இந்த வலைதளப் பக்கத்தில் 15 நிமிடங்களுக்கு ஒருமுறை வானிலை பற்றிய புதிய தகவல்கள் பதிவேற்றம் செய்யப்படும் என்று கூறினார்.

இதுதவிர, கும்பமேளா நடைபெறும் பகுதியில் வானிலை பற்றிய டிஜிட்டல் தகவல் பலகைகள் அமைக்கப்படும் என்றும் திரு. Manish Ranalkar தெரிவித்தார்.

இதனிடையே, கும்பமேளாவின் போது, ரயில் நிலையங்களில் முன்பதிவில்லா பயணச்சீட்டுகளை எளிதில் பெறுவதற்கு ஏதுவாக, வடக்கு-மத்திய ரயில்வே புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, பச்சை சட்டைகளை அணிந்த ரயில்வே ஊழியர்கள் பிரயாக்ராஜ் ரயில் நிலைய வளாகத்தை சுற்றி வருவார்கள் என்றும், அவர்களது சட்டையில் இடம்பெற்றுள்ள QR கோடை ஸ்கேன் செய்து, யாத்திரிகர்கள் முன்பதிவில்லா டிக்கெட்டுகளை சிரமமின்றி பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

சென்னை பெரம்பூரில் உள்ள ரயில்வே மருத்துவமனையில் முதுநிலை மருத்துவப் படிப்புகளை தொடங்க திட்டமிட்டுள்ளதாக ரயில்வே சுகாதார பிரிவின் தலைமை இயக்குநர் திரு. மான் சிங் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.

தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக ரயில்வே மருத்துவமனைகளிலும், ரோபோட்டிக் அறுவை சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு. ஆர்.என். சிங், இந்த புதிய வசதிகளை ரயில்வே தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மட்டுமின்றி, வெளி நோயாளிகளும் கட்டணம் செலுத்தி பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறினார்.

>>>>><<<<

INS Nilgiri உள்ளிட்ட மூன்று அதிநவீன போர்க்கப்பல்கள் விரைவில் கடற்படையில் சேர்க்கப்படவுள்ளன.

மும்பையில் உள்ள Mazagon கப்பல் கட்டும் தளத்தில் இந்த கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் INS Nilgiri கப்பல், மறைந்திருந்து எதிரிகளை தாக்கும் திறன் கொண்டதாகவும், INS Surat கப்பல் எதிரிகளுக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடியதாகவும், மற்றொரு கப்பலான INS Vaghsheer, ஸ்கார்பியன் ரகத்தைச் சேர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

விஜய் அஸாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தமிழகம் 10 விக்கெட் வித்தியாசத்தில் மிஸோரமை வென்றது.

விஜயநகரத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த மிஸோரம் அணி, 71 ரன் மட்டுமே எடுத்து 21 புள்ளி இரண்டு ஓவரிலேயே ஆட்டமிழந்தது.

72 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த தமிழக அணி, 10 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 75 ரன் எடுத்தது.

>>>>><<<<

பிரிட்டன் ஓப்பன் ஜூனியர் ஸ்குவாஷ்போட்டியில் இந்தியாவின் Saharsh Shahra காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 11-0, 11-3, 12-10 என்ற செட்கணக்கில் சுவிட்சர்லாந்தின் Marcos Alvarez –ஐ வென்றார்.

11 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Alia Kankaria –வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<

இந்தியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்ட நேர இறுதியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 9 ரன் எடுத்துள்ளது.

சிட்னியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா தொடக்க முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கி, 185 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>>END<<<<